# சவுல்
# படுபாதாள முடிவுக்கான மகிழ்பொங்கும் ஆரம்பம்

*1 சாமுவேல் புத்தகத்தில் உள்ள பல்வேறு பிரசித்தி பெற்றவர்களில், பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த சவுல் (நமது) கவனத்தை ஈர்க்கக் கூடியவராக உள்ளார். இவர் காணாமற்போன தன் தந்தையின் கழுதைகளைத் தேடிக் கொண்டு வரும்படி அனுப்பப்பட்டவராக முதல் முதல் அறிமுகமாகின்றார் (9:3ஜீ5). இவர் தமது வாழ்வின் முற்பகுதியில் தாழ்மையானவராகவும் மற்றவர்களைக் குறித்து அக்கறையுடையவராகவும் இருந்தார். பிந்திய ஆண்டுகளில் இவர் மிகப் பெருமளவில் மாறிப்போனார். இவர் வெற்றியாளராயிருப்பதற்கு எல்லா வாய்ப்புக்களையும் கொண்டிருந்தார், இருப்பினும் இவர் பரிதாபகரமான வகையில் தோல்வியுற்றார்! இவரது வாழ்வானது பின்வரும் நிகழ்ச்சியினால் தக்கவாறு விவரிக்கப் படுகின்றது.*

*தேவன் மீது நம்பிக்கையற்ற ஒரு சமூகத்தினர் மதத்தை ஏளனம் செய்வதற்கும் தங்கள் தேவதூஷணத்தில் ஒருவரையொருவர் உற்சாகப் படுத்துவதற்கும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் ஒன்று கூடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இவர்கள் தங்கள் வேதாகமங்களை எரிக்கும் அளவுக்கு தங்கள் செயல்பாடுகளில் தீவிரம் காண்பித்தார்கள்! இவர்கள் சமீபத்தில் ஒரு இளைஞனை தங்களின் பயங்கரமான ஐக்கியத்தில் சேர்த்திருந்தார்கள். இந்த இளைஞன் மாபெரும் மத அனுகூலங்களுடன் வளர்க்கப்பட்டவனாயிருந்தான். தேவனற்றவர்களின் கூட்டங்களில் இவன் கலந்து கொள்ளுகையில், தனது வேதாகமத்தை நெருப்பில் போட்டு இனி ஒருக்காலும் சபை ஆராதனைக்குச் செல்ல மாட்டேன் என்று வாக்களித்தான். இதன் பிறகு வெகு விரைவிலேயே இவன் மிகவும் சுகவீனம் அடைந்தான். இவனைக் காண வந்த கிறிஸ்தவ மனிதர் ஒருவர் இவன் மிகவும் மனக் கவலையுடன் இருப்பதைக் கண்டார். அந்தக் கிறிஸ்தவர் இவன் மனந்திரும்ப இணங்கச் செய்ய முயற்சி செய்தார். அவர் இவனிடத்தில் தேவனுடைய இரக்கத்தைப் பற்றி எடுத்துரைத்தார். இந்த இளைஞனோ, "என்னிடத்தில் இரக்கத்தைப் பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? இது மிகவும் தாமதமானதென்று நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்! ஒரு காலத்தில் என்னால் ஜெபிக்க முடிந்தது, ஆனால் இப்பொழுது என்னால் ஜெபிக்க முடியாது. நான் ஜெபிக்க மாட்டேன்!" என்று கூறினான். பின்பு வெகுவிரைவிலேயே இவன் தனது தேவதுஷணங்களில் தன்னை ஊக்கப் படுத்தியவர்களின் மீது பயங்கரமான சாபங்களை உச்சரித்தவாறே மரித்துப்*

*போனான். இவன் மரிக்கும் பொழுது, "எனது வேதாகமம்! ஓ, எனது வேதாகமம்!" என்று கூறியவாறே மரித்தான்.*

*அந்த இளைஞனுக்கும், சவுலுக்கும் விசுவாச விலக்கம் என்பதே பெருந்துயராக இருந்தது. விசுவாச விலக்கம் என்பது வேதவசனங்களில் உண்மையான அச்சுறுத்துதலாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது (ஓசியா 4:16; ஏசா. 1:4; வெளி. 2:4; 1 தீமோ. 6:10, 21; 2 தீமோ. 4:4). இரட்சிப்பில் இருந்து விழுந்துபோகுதலைப் பற்றி நான்கு புத்தகங்களில் எடுத்துரைக்கப் படுகின்றது:*

*"வழி விலகிப் போகுதல்" என்ற வார்த்தையை வேதாகமத்தின் வேறெந்தப் புத்தகத்தை விடவும் எரேமியாவின் புத்தகம் அதிகமாகப் பயன்படுத்துகின்றது.*
*ஓசியாவின் புத்தகம் "வழி விலகிப் போனவர்களுக்கான" சுவிசேஷம் என்று அழைப்படுகின்றது.*
*கலாத்தியருக்கு எழுதிய நிருபம் புத்தியில்லாதவர்கள் என்று அறியப்பட்ட ஒரு சபையாருக்கு எடுத்துரைக்கப்பட்டது (கலா. 1:6; 5:7).*
*எபிரெயருக்கு எழுதிய நிருபம் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தைக் கைவிடும்படி சோதிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் ஒரு குழு-விற்கு எழுதப்பட்டது.*

*பழைய ஏற்பாட்டில் விசுவாச விலக்கத்திற்கான மிகத் தெளிவான ஒரு விவரிப்பை சவுல் அளிக்கிறார். இவர் தமது பலமாக இருந்திருக்க வேண்டிய தில் பலவீனராய் இருந்ததை நிரூபித்தார் (15:17). இவர் தமது தாழ்மை யினாலேயே தேர்வு செய்யப்பட்டார், இருப்பினும் அரசர் என்ற நிலைப் பாடானது இவருடைய தாழ்மையை முரட்டுத்தனமாக மாற்றி விட்டு இவரை பரிதாபகரமான அழிவிற்கு அழைத்துச் சென்றது. இப்படிப்பட்ட பேரழிவு கவனிக்கத் தக்கதாக உள்ளது, ஏனெனில் தேவனுடைய மனிதர் ஒப்புக் கொடுத்தலின் உச்சியிலிருந்து தேவ நம்பிக்கையின்மையின் ஆழங்களில் விழுந்தார்!*

## சவுலின் வரலாறு:
## மகிழ்ச்சியான ஆரம்பம்

*வரலாற்று எடுத்துரைப்பானது கீஸின் மகனான சவுலின் எழுச்சியை விவரிக்கின்றது. இவர் 9:2ல் தன் தந்தையின் கட்டளையைப் பின்பற்றுகிற கீழ்ப்படிதலுள்ள மகனாக அறிமுகப்படுத்தப்படுகின்றார். காணாமற்போன கழுதைகளை அவர் தேடிச் சென்றது வீணானது, மற்றும் இவர் கடைசியில் உதவி நாடி சாமுவேலிடம் திரும்பினார். சாமுவேல் சவுலிடம் பேசிக் கொண்டிருக்கையில், சவுல் இஸ்ரவேல் விரும்பிய அரசராக வேண்டும் என்பது தெளிவாக்கப்பட்டது. சவுல் இதை நம்ப மறுத்தார் (9:21). அடுத்த நாளில், சவுல் இல்லம் திரும்பத் தயாராகையில், அவர் "வேறே இருதயம்" கொண்டவரானார் (10:9); அவர் மாறுபட்ட மனிதரானார். சவுல் புறப்*

*படுகையில் அவரிடத்தில் சாமுவேல், தேவன் அவரை அரசராகத் தேர்ந்து கொண்டார் என்பதை மூன்று அடையாளங்கள் அவருக்கு உறுதிப்படுத்தும் என்று கூறினார். கழுதைகள் கண்டுபிடிக்கப்படும் (10:2); ஆராதிக்கச் செல்லும் மூன்று மனிதர்களிடமிருந்து சவுல் ஒரு பரிசைப் பெறுவார் (10:4); மற்றும் சவுல் தீர்க்கதரிசிகளுடன் சேர்ந்து கொள்ளுவார் (10:6). இந்த உறுதிப்பாடுகளுடன் கூட, சவுல் இன்னமும் தான் இஸ்ரவேலுக்குத் தேர்ந்து கொள்ளப்பட்ட அரசன் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாத வராயிருந்தார் (10:16).*

*மிஸ்பாவில் கூடிய கூட்டமானது புதிய அரசரை வெளியரங்கமாகத் தேர்ந்தெடுத்தது, சவுல் (அரசர் என்று) அறிவிக்கப்பட்டார் (10:17ஜ்27). சவுல் (தாமாக) முன்னால் அடியெடுத்து வைத்து எதிர்ப்பற்ற வேட்பாளர் என்ற வகையில் கிரீடத்தை உரிமைகோரவில்லை. அவரது தன்னடக்கமும் தாழ்மையும், அழகாக வெளிப்படுத்தப்பட்டது (10:22). அவர் அரசராக நியமிக்கப்பட்ட பொழுது அவரது தாழ்மை அவர் விமர்சிக்கப்படுதலுக்கு, பாராட்டத்தக்க வகையில் பதில்செயல் செய்ய அவருக்குப் பெலனளித்தது (10:27ஆ). அவர் பழி வாங்குதலை விரும்பவில்லை, அல்லது பழி தீர்த்துக் கொள்பவராயிருக்கவில்லை. அவர் தம்மை வியப்புமிக்க சுய கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொண்டார். இதைக் கூறும் வேத வசனம் "அவர் காது கேளாதவர் போல் பதில்செயல் செய்தார்" என்றே நேரடியாக அர்த்தப்படுகின்றது. அந்த வார்த்தைகள் ஒருக்காலும் பேசப்படாதது போல் அவர் நடந்து கொண்டார்.*

*சவுல் முடி சூட்டப்பட்ட பிறகும் கூட தாழ்மையாகவே நிலைத் திருந்தார் – அவர் உழவு செய்வதற்கு வீடு திரும்பினார்! (10:26; 11:5). ஒரு இளைஞர் என்ற வகையில் அவர் குறிப்பிடத்தக்க/சிறப்புமிக்க ஆத்துமா வைக் கொண்டிருந்தார். இவர் பெருமையைக் கட்டுப்படுத்தினார், பழி வாங்கும் இச்சையைக் கீழ்ப்படுத்தினார், மற்றும் பகட்டு, மகிமை ஆகிய வற்றிற்கான இச்சையை வெற்றி கொண்டார். நீங்கள் இவரை பாராட்ட மால் இருக்க இயலாது!*

*புதிதாக நியமிக்கப்பட்ட அரசர் யாபேஸ் – கீலேயாத்தில் நடந்த நிகழ்ச்சிகளினால் சோதிக்கப்பட்டார் (11:1ஜ்15). யெப்தா அம்மோனியர் களைக் கீழ்ப்படுத்திய பின்பு (சவுல் காலம் வரைக்கும்) நூறு ஆண்டுகள் கடந்திருந்தன. இப்பொழுது அவர்கள் யாபேஸைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இறுதி அறிவிப்பொன்று தரப்பட்டது (11:2), இது யுத்தத்தினால் பயனில்லை என்று அதன் (யாபேஸின்) குடிகள் நினைக்கும் படி செய்திருக்க வேண்டும். நியாயதிபதி 20, 21ன் உள்நாட்டு யுத்தங்களின் இரத்தக் கட்டுகளைப் பின்னோக்கி நினைத்துப் பார்த்தபடியினால், நம்பிக்கையின்மை அவர்களைக் கிபியாவுக்குத் துரத்திற்று. இந்தச் செய்தியை சவுல் கேள்விப்பட்ட பொழுது, அவர் ஒரு படையுடன் எழும்பி, அம்மே ானியர்களை முற்றிலுமாக முறியடித்தார் (11:6ஜ்11). சவுல் அதிகாரத் துவத்திற்கு எழும்பியது ஆச்சரியம் மிகுந்த தொடக்கமாயிருந்தது. மற்றும் இஸ்ரவேல் முழுவதிலும் பெரு மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓடியது (11:15).*

## சவுலின் வரலாறு:
## கவலை தரும் வீழ்ச்சி

தேவனுடைய மக்களின் அரசர் என்ற வகையில் சவுலின் பணியில் தொடக்க கால ஆண்டுகளில் அவர் தேவனுக்குத் தம்மை அர்ப்பணித்திருந்த படியால் வெற்றியைச் சந்தித்தார் (11:13). சில ஆண்டுகள் கடந்த பிறகு, இவரது இருதயம் மாறியது, அந்த மாற்றத்துடன் இஸ்ரவேலிலும் ம ாற்றம் ஒன்று வந்தது. சவுலின் வீழ்ச்சி 1 சாமுவேலில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் மீது பிலிஸ்தியர்கள் படையெடுத்து வந்த பொழுது அதன் அழிவிற்கான முதல் குறிப்பு தோன்றியது (13:6). பயத்தின் ஆவி நாடு முழுவதிலும் வந்து அமைந்து கொண்டிருந்தது, மற்றும் விரோதியை எதிர் கொள்வதற்கு அரசர் ஒரு படையைக் கூட்டியிருந்தார். பலி செலுத்த சாமுவேல் வர வேண்டும் என்பதற்காக சவுல் காத்திருந்தார், ஆனால் தீர்க்கதரிசி வரவில்லை. நாட்கள் கடந்தபோது படை வீரர்கள் கைவிட்டுச் சென்றதின் விளைவாக, படையின் தகுதி நிலைகள் படிப்படியாகச் சுருங்கலாயின (13:7, 8). சவுல் பித்துப் பிடித்தவராகி தாமே பலி செலுத்தினார் (13:9). (இதனால்) அரசர், சாமுவேலினால் கண்டிப்புடன் கடிந்து கொள்ளப்பட்டார், ஆனால் தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு அவர் சிறிதளவே கவனம் கொடுத்தார் (13:10, 11, 13, 14). இது சவுலின் வீழ்ச்சியினுடைய தொடக்கத்தைக் குறித்தது.

சவுலின் வீழ்ச்சி பற்றிய அடுத்த குறிப்பு 15:9ல் தோன்றுகின்றது:

> சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவை களையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவைகளும், உதவாதவைகளுமான சகல வஸ்துக் களையும் முற்றிலும் அழித்துப் போட்டார்கள்.

இங்கு இவர் தேவனால் கடைசியாகப் புறக்கணிக்கப்பட்டார். பிலிஸ்தியர் களின் படையெடுப்பு நடைபெற்று பல ஆண்டுகள் கடந்திருந்தது, மற்றும் இந்த ஆண்டுகளில் சவுல் அற்புதமான வெற்றிகள் பலவற்றைப் பெற்றிருந் தார். இவரது படைகள் (எண்ணிக்கையில்) அதிகரித்தன மற்றும் பல யுத்தங்களை வெற்றி கொண்டன, இவர் தமது இல்லத்தில் கணிசமான அளவுக்கு வளமை பெற்றிருந்தார். மற்றும் இவரது விருப்பமே முற்றான சட்டமாயிற்று (14:47, 48). ஆனால், சவுல் 15:9ல் பரிதாபகரமாகத் தவறிப் போனார். அவர் அமலேக்கியரை (முற்றிலுமாக) அழிக்க மறுத்த பிறகு, அவர் வேத வசனங்களில் தரப்பட்டுள்ள மிகவும் கண்டிப்பான கடிந்து கொள்ளுதல்களில் ஒன்றிற்குக் கீழ்ப்பட்டவரானார். தேவன் சவுலுக்கு எவ்வளவோ நன்மை செய்திருந்தும், சவுலின் வாழ்வில் பேராசை ஆட்சி செலுத்தி அவரது வாழ்வை அழித்துப் போட்டது. தேவனிடத்தில் கலகம் செய்தல் என்ற எண்ணப்போக்கு அவரைக் கட்டுப்படுத்தியது (15:23).

சவுலின் பாவம் பற்றிய அவரது கூற்றுக்கள் உண்மையானவைகளாய்

*இருக்கவில்லை, ஏனென்றால் அவைகள் அவரது கட்டுப்பாட்டிற்குள் நிலைத்திருக்கும்படியான அவரது விருப்பங்களை முகமூடியிட்டு மறைத்தன (15:25ஜீ30). இவர் மக்களுடன் நல்ல நிலைப்பாட்டில் இருக்க விரும்பினார், அதைச் செய்வதற்கு சாமுவேலினுடைய நண்பர் போல் இருத்தல்தான் ஒரே வழியாயிருந்தது. இவரது தாழ்மை, முரட்டாட்டமான சுயநலத்திற்கு வழிவிட்டு விலகிச் சென்றது!*

*இதன் விளைவுகள் கவலைக்குரியதாயிருந்தன:*

> *கர்த்தர் சாமுவேலை நோக்கி: "இஸ்ரவேலின்மேல் ராஜாவா யிராதபடிக்கு நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்த மட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்? நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டுவா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜா வாகத் தெரிந்துகொண்டேன்" என்றார் (16:1).*

*எபிரெயப் பேச்சுச் செறிவில், சர்வ வல்லவர் சில வேளைகளில் தாம் அனுமதிக்கிறதைச் செய்கிறார் என்று கூறப்படுவதுண்டு. அதுவே சவுலுக்கு நடைபெற்றது (இ.வ. யோபு 1:6ஜீ12; லூக். 22:31). சவுல் கலகத்தின் பாதையைத் தேர்ந்து கொண்டதின் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிய ம றுத்திருந்தார். இப்போது இவர் தமது முடிவுகளைக் கட்டுப்படுத்தும்படி பொல்லாங்கை அனுமதிக்குமாறு அதனுடன் விடப்பட்டிருந்தார்.*

*அந்தத் துன்பகரமான நிகழ்ச்சியை சவுல் உணர்ந்து, தனது கீழ்ப்படி யாமையை ஈடுகட்டுவதற்கு நற்செயல்கள் செய்வதின் மூலம் தேவனின் உதவியைப் புதுப்பித்துக் கொள்ள முயற்சி செய்தார் என்பது உறுதி. தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பை செயலற்றுப் போகும்படி செய்ய/ நடுநிலை யாக்க, சவுல் இரண்டு விஷயங்களைச் செய்ய முயற்சித்தார். இவர் கிபியோனியரை அழிக்க முயன்றார் (இ.வ. 2 சாமு. 21:2) மற்றும் ஆவிக்கேற்றவைகளுடன் தொடர்பு கொள்ளுதலுக்கு எதிராகச் சட்டங்களை அமுல் படுத்தினார் (28:9) ஆனால் சவுலின் பரம்பரை அழிவடைந்தது. அவரது இருதயத்தினுள் இருந்த அழுகிய தன்மையானது அவரைச் சுற்றிலுமிருந்த எல்லாரையும் கெடுத்துப் போட்டது. பிற அரசர்களைப் போலவே இவரும் ஒரு ஆடம்பரமான கிரீடத்தை அணிந்து கொண்டார் (2 சாமு. 1:10); இவர் தமது அரண்மனையின் ஆடம்பரத்தை அதிகரித்தார் (2 சாமு. 1:24); இவர் தமது மகன்களுக்குப் பெயரிடுவதில் யெகோவாவிற்கான ஆராதனையுடன் பாகாலுக்கான ஆராதனையை வீணாகக் கலந்து வைத்தார்; மற்றும் இவர் வைப்பாட்டிகளைச் சேர்த்துக் கொண்டார்.*

*சவுலின் வீழ்ச்சி அடிக்கடி இவருக்கு நேரிட்ட மனச்சோர்வின் தாக்குதல்களுக்கு இவரை வழிநடத்தி சென்றது. இசைக் கருவியை இசைப்பதினால் அரசரை அமைதிப்படுத்த மந்தை மேய்க்கும் இளைஞன் ஒருவன் தேடிக் கொண்டு வரப்பட்டான் (16:19). ஆனால் இளமை நிறைந்த தாவீதின் பிரசன்னமானது சவுலின் இருதயத்தினுள் விஷ(எண்ண)த்தைத் தூண்டியது. கோலியாத்தின் மரணத்தைத் தொடர்ந்து, சவுலின் சிந்தனை களில் பொறாமையும் வெறுப்பும் இடம் பெற்றன. சித்தம் கலங்கிய*

நிலையில் ஒருமுறை சவுல் தாவீதை (ஈட்டியினால் குத்தி) கொல்ல முயற்சி செய்தார். அவ்வேலையை பிலிஸ்தியர்கள் செய்வார்களென்று நம்பி, முதலில் அவர் வஞ்சனையைப் பயன்படுத்தினார் (18:21). கடைசியில் இவர் தாவீதிற்கு எதிராக வெளிப்படையான நடவடிக்கைகளை மேற்கொண்டார் (19:1). தாவீதிற்கு எதிராக சவுல் கொண்டிருந்த கசப்பான வெறுப்பை ஏதொன்றினாலும் நிறுத்த இயலாது போயிற்று. அரசரின் உயிர் இருமுறை (தாவீதினால்) காப்பாற்றப்பட்டது, ஆனால் தாவீதின் கருணைமிக்க பண்பு சவுலின் கடின இருதயத்தின் மீது எவ்வித செயல்விளைவையும் ஏற்படுத்த வில்லை. சவுல் வெறுப்பினால் பட்சிக்கப்பட்ட மனிதராகச் சீரழிந்து போயிருந்தார். சவுலின் தாழ்மை சிதைவுற்றுப் போனது. தொடக்க ஆண்டுகளின் பெருமகிழ்வு பொங்கிய நிலையானது படிப்படியாக பிந்திய ஆண்டுகளின் இருளடர்ந்த தன்மையினால் மேற்கொள்ளப்பட்டன.

எந்தோரில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அவரது வீழ்ச்சி ஏறக்குறைய முற்றுப் பெற்றிருந்தது (28:3ஜீ25). கோலியாத் கொல்லப்பட்டு ஆண்டுகள் பல கழிந்து போயிருந்தன. சவுலின் பரந்து விரிந்த தேடுதல் களில் இருந்து தப்பிக்க அகதியாக அலைந்து திரிவதில், தாவீதினால் பல ஆண்டுகள் செலவிடப்பட்டிருந்தன. சவுலின் பழைய விரோதிகளான பிலிஸ்தியர்கள் இஸ்ரவேலுக்குள் மீண்டும் ஒரு புதிய படையெடுப்பை நடத்தினார்கள். எஸ்தரலோன் சமவெளியில் இருந்த மாபெரும் வர்த்தகச் சாலையே பிலிஸ்தியரின் குறிக்கோளாயிருந்ததாகத் தோன்றுகின்றது. சவுல் படைகளைக் கில்போவா மலையின் மீது ஒன்று கூட்டினார், ஆனால் அவரது நம்பிக்கை முடக்கப்பட்டது (28:5; இ.வ. யோபு 23:8). அவருக்கு உதவி தேவைப்பட்டது, ஆனால் தேவன் அமைதி காத்தார். அரசர் அஞ்சனக் காரியிடம் ஆலோசனை கேட்கச் சென்றார் (28:6, 7), ஆனால் அஞ்சனம் பார்ப்பவள் சாமுவேலின் தோற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த பொழுது அவளது தந்திரம் வெளிப்படுத்தப்பட்டது (28:12). முதிய தீர்க்கதரிசியான சாமுவேல், சவுலுக்கு நம்பிக்கையோ அல்லது ஆறுதலோ அளிக்கவில்லை, ஏனெனில் இறங்கு முகமாய் சென்று கொண்டிருந்த பேரழிவை ஏதொன்றி னாலும் தவிர்க்க முடியாதிருந்தது (28:16). சாமுவேலின் செய்தி பேசப்பட்ட பொழுது சவுல் நொறுங்கி விழுந்தார் (28:20). அஞ்சனம் பார்ப்பவளின் வீட்டில் களிமண் தரையில் வீழ்ந்து கிடந்த வேளையில் சவுலின் சிந்தையில் ஓடிக் கொண்டிருந்த சிந்தனைகளைக் கற்பனை செய்து பார்க்க முயற்சி செய்து பாருங்கள். அநேகமாக இவர், தாம் யெகோவாவிற்கு எதிராகக் கலகம் செய்ததினிமித்தமாக விளைந்த படிப்படியான வீழ்ச்சியை மறு கண்ணோட்டமிட்டிருக்கலாம்.

சவுலின் வீழ்ச்சி கில்போவா மலையில் முழுமையடைந்தது (31:1ஜீ6). இரு படைகளும் ஒன்று மற்றதற்கு எதிராகத் திரண்டு வந்தன, யுத்தம் தொடங்கிற்று. சவுலின் படை தோற்கடிக்கப்பட்டது, மலையின் மீதெங்கும் இரத்தம் மூடிற்று. சவுல் காயப்பட்ட பொழுது, பிடிபடுவதற்கு மாறாக தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார், ஆனால் அவரது முயற்சிகள் தோல்வியடைந்தன. இவர் ஒரு அமலேக்கியனால் கொல்லப்பட்டார் (2 சாமு. 1:1ஜீ10). யாபேஸ்ஜீகீலேயாத்தின் நன்றியுள்ள குடிமக்கள், சவுல்

மற்றும் அவரது மகன்களின் உடல்களை மீட்டு, அவர்களின் எஞ்சிய பாகங்களை தக்க வகையில் அடக்கம் செய்தார்கள் (31:13).

## சவுலின் வரலாறு: தளர்வடையச் செய்யும் செல்வாக்கு

சவுலின் வாழ்வு பற்றிய எடுத்துரைப்பில், அவரது துன்ப நிலைக்கு பொறுப்புடையதாக ஒரே ஒரு காரணி – சுயநலம் என்பது – மட்டுமே காணப்படுகின்றது. இவர் தமது கண்களை, தேவனை விட்டு நீக்கிப் போட்டு தம்மீதே வைக்கலானார். சுயநலமானது சவுலை அவரது வீழ்ச்சிக்கு வழிநடத்தி இறுதியில் அவரைக் கொன்று போட்டது. (11:13ஐ 15:12; 18:8; 15:7 ஆகியவற்றுடன் வேறுபடுத்தி ஒப்பிடவும்.)

சுயநலம் ஆளுகை செய்யும் பொழுது சவுல், பெருமை, பழிவாங்குதல் மற்றும் பொருளாதாயக் கொள்கை ஆகியவற்றின் மீது தமது கட்டுப் பாட்டை இழந்தார். சுயம் தம்மை ஆளும்படி இவர் அனுமதித்த பொழுது, அவர் மோசமான மற்றும் கசப்புணர்வுள்ளவரானார். இவர் கொலைகார இருதயத்தை காட்டிக் கொடுத்தவராக படுபாதாள மரணத்தில் இறந்து போனார் (ஏசா. 56:11; எரே. 17:11).

சவுலின் சுயநலமானது அவரைக் கில்காலில் பலி செலுத்தும்படி கட்டாயப்படுத்தியது (13:9). அவர் தேவனுக்கு ஊழியம் செய்ய மறுத்து, சர்வாதிகாரியான ஆட்சியாளராயிருந்தார். அவர் விசுவாசத்துடன் தேவனுக்கென்று காத்திருக்க இயலாமற் போனது. சவுலைப் பொறுத்த மட்டில் தேவன் மிகவும் மெதுவாக நகர்பவராயிருந்தார், இவரோ காத்திருப்பதில் அயர்வடைந்தார் (நீதி. 30:8, 9).

சுயநலம் சவுலைத் தமது தவறுதல்களுக்குச் சாக்குப் போக்குத் தேட வழிநடத்திற்று. 1 சாமுவேல் 13:11, 12 வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றது:

> “நீர் செய்தது என்ன?” என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: “ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப் போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடி வந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்து விடுவார்கள் என்றும் நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன்” என்றான்.

உண்மையில் இவர், “நான் அதைச் செய்ய விரும்பவில்லை, ஆனால் அதைச் செய்யாதிருக்க முடியாமற் போயிற்று! சூழ்நிலைகள் என்னைப் பலவந்தப் படுத்தின!” என்றே கூறினார் (இ.வ. 15:19ஜீ21; மீகா. 2:2).

சுயநலம்தான் சவுல் அமலேக்கியர்களின் உயிரைத் தப்புவிக்கும்படி செய்தது (15:9). பேராசை வரைந்த கோடானது அவர் தமக்கென்று மிகச் சிறந்தவற்றை வைத்துக் கொள்ளச் செய்தது (15:19). ஒரு அமலேக்கியனின்

*பட்டயத்தினாலேயே சவுல் கில்போவா மலையில் அழிந்து போனார்! சுயநலமானது எப்பொழுதுமே நஷ்டத்திற்கே காரணமாகின்றது (மத். 16:26; ஆகாய் 1:5, 6).*

*தொடக்க நாட்களில் சவுல் சுயநலத்தைக் கட்டுப்படுத்தியிருந்தார். இருப்பினும், அந்தக் கட்டுப்பாடு மிக மெதுவாகக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில், காணாமற் போய் விட்டது. பின்பு அவர் துன்பத்தை அனுபவித்தார்! (15:19ஆ; நீதி. 16:18).*

## சவுலின் வரலாறு:
## குறிப்பிடத்தக்க பாடங்கள்

*கர்த்தருடைய சித்தத்திற்குக் ''காத்திருத்தல்'' என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? விஷயங்களை ஒருக்காலும் உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டாம்.*

*விசுவாச விலக்கம் கொண்ட பெற்றோரின் செல்வாக்கு எவ்வளவு கவலைக்குரியதாகவும் தொலைவில் சென்றடையக் கூடியதாகவும் உள்ளது (31:2; 2 சாமு. 21:1ஜீ10). சவுலின் செயல்களினால் இவரது முழுக் குடும்பமும் துன்பம் அடைந்தது!*

*தேவனிடமிருந்து விசுவாச விலக்கம் அடைந்து செல்லுதலில் எப்பொழுதும் இருக்கின்ற உண்மை நிலை எவ்வளவு பயம் நிறைந்ததாக உள்ளது (17:11; 18:12; 28:16). நம் எல்லாருக்கும் பொதுவான சோதனைகள், மிகவும் கவர்ந்திழுக்கக் கூடிய சோதனைகள் உள்ளன, ஆயினும் நாம் அவற்றுக்கு இணங்கி விடக் கூடாது. உள்ளான மனிதன் தினந்தோறும் சிலுவையில் அறையப்பட வேண்டும்.*

*விசுவாச விலக்கம் அடைகின்ற விசுவாசியின் இருதயம் எவ்வளவு உணர்வற்றதாய்ப் போகக்கூடும் (24:17), போலி நடிப்புத்தனமான மனந்திரும்புதல் சாத்தியமாயிருக்கலாம், ஆனால் அது பொல்லாத இருதயத்தை பாவத்திற்குள் ஆழ்ந்து போகவே வழிநடத்தும்!*

*சுயநலத்துடன் இருப்பதற்கு எவ்வளவாக சோதிக்கப்படுகின்றோம், ஆனால் சுயநலத்துடன் இருப்பதென்பது எவ்வளவாய் அழிவுக்குரியதாக உள்ளது (1 கொரி. 10:24; 2 கொரி. 5:15அ; நீதி. 1:19; 15:27).*

*நாம் எல்லா "அமலேக்கியர்களையும்" நம்மை விட்டு அகற்ற வேண்டும்! நாம் இதைச் செய்யத் தவறி விட்டால், பிந்திய ஆண்டுகளில் அவர்கள் நம்மீது பாய்ந்து நம்மை அழித்து விடுவார்கள்! கொலோசெயர் 3:8ஜீ9 வசனங்கள் நம்மைப் பின்வருமாறு எச்சரிக்கின்றன:*

> ... இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு ...

# முடிவுரை

*சவக்கடலின் கரையில், யோர்தான் ஆற்றின் வெள்ளப் பெருக்கினால் வேருடன் பிடுங்கி உப்பு நீருக்குக் கொண்டு வரப்பட்ட மாண்புமிக்க பல மரங்களின் எஞ்சிய பகுதிகள் கிடக்கின்றன. இந்த மரங்கள் கனியும் நிழலும் தரும்படி தேவனால் நடப்பட்டு, ஆனால் தங்களுக்கான ஆதி நோக்கத்தை இழந்து போன உயிர் வாழ்வை நமக்கு நினைவூட்டுகின்றன. அவைகள் இறந்து போய் வீணாய்க் கிடக்கின்றன. இதைக் காட்டிலும் பெரிய துன்பத் தைச் சந்தித்த உயிர்களைப் பற்றிய கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது, அந்த எண்ணிக்கையில் சவுல் முக்கியத்துவம் வகிக்கின்றார்!*

*சவுலின் ஆட்சிக்காலம் மிக நன்றாகத் தொடங்கியது. ஆனால் சுயநல மானது அவரை கடின சித்தம், கீழ்ப்படியாமை, மற்றும் மேட்டிமை ஆகிய வற்றிற்கு வழிநடத்திச் சென்றது. இன்றைய நாட்களில் அவர் தம் பரம் பரைப் பண்பானது நீதிக்கென்று புதுப்பிக்கப்பட்ட பிரபுவம்சத் தோற்று விப்பாளரின் பண்பாக இருப்பதில்லை. இவரது வம்ச வழியானது சீர்கேடு மற்றும் மோசடி ஆகியவற்றிற்கு அறியப்பட்டதாக உள்ளது. நேர்மையான எல்லா இருதயங்களும் எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும். சவுலைப் போன்று அதே தவறுகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களாயிருந்து அவர் தோல்வியுற்ற இடத்தில் தாங்கள் வெற்றி கொள்ள இயலும் என்று நினைக்கத் துணிகின்ற யாவருக்கும் கில்போவாவின் களம் ஒன்று தயாராக உள்ளது! (1 கொரி. 10:12).*